இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 159 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 06 – செவ்வாய்க்கிழமை 20 ஜனவரி 2026 – கோவை ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 159 : Thiruvalluvar Year - 2057 - Thai 06 - Tuesday 20 January 2026 - Kovai ★★ 10 Pages ₹ 5.00

### தான் சேர்த்த அறிவுச் செல்வத்தை அடுத்த தலைமுறைகளுக்கும் கொண்டு சேர்க்கும் கருவிதான் புத்தகங்கள்! எனவே

# வாசிப்பு மூலம் அறிவுத் தீ பரவட்டும்!

## பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.01.2026) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற "சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா 2026" நிறைவு விழாவில் தமிழ்நாடு மொழிபெயர்ப்பு மானியங்கள் பட்டியலை (Tamil Nadu Translation Grants Catalogue) வெளியிட்டார். இவ்விழாவில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், புக்கர் பரிசு விருதாளர் திருமதி. பானு முஸ்தாக், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, புத்தகப் பதிப்பாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஜன. 20 -**

**"மனித இனம் தன்னுடைய சிந்தனைகளை, தான் சேர்த்த அறிவுச் செல்வத்தை, பிறருக்கும், அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கொண்டு சேர்க்கும் கருவிதான், புத்தகங்கள்! எனவே தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு வீட்டிலும் வாசிப்பு மூலம் அறிவுத்தீ பரவட்டும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா - 2026 நிறைவு விழாவில் உரையாற்றும்போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.1.2026) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா 2026 நிறைவு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

மனித இனம் தன்னுடைய சிந்தனைகளை, தான் சேர்த்த அறிவுச் செல்வத்தை, பிறருக்கும், அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கொண்டு சேர்க்கும் கருவிதான், புத்தகங்கள்!

### ஒவ்வொரு வீட்டிலும் அறிவுத்தீ பரவ வேண்டும்!

வாசிப்பு மூலமாக, தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு வீட்டிலும் அறிவுத்தீ பரவ வேண்டும் என்று, ஏராளமான முன்னெடுப்புகளை நம்முடைய திராவிட மாடல் அரசு சார்பில் எடுத்து செய்து கொண்டிருக்கிறோம்! அதில் முக்கியமானது தான், புத்தகத் திருவிழாக்கள்!

எழுத்தாளர்கள் - பதிப்பாளர்கள் விற்பனையாளர்கள் - வாசகர்கள் என்று எல்லோருக்குமான உறவுப் பாலமாக, இந்த புத்தகத் திருவிழாக்களை சிறப்பாக நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்!

தலைநகரான சென்னையில் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களிலும் புத்தகத் திருவிழாக்களை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறோம். இதன் தொடர்ச்சியாகதான், இந்த நான்காவது சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

### எழுத்தாளர் பானு முஷ்டாக்கின் எழுத்து நம்மை பெருமைப்படுத்துகிறது!

102 நாடுகளின் பங்கேற்போடு சிந்தனையின் ஊற்றாக, பண்பாட்டின் கருவூலமாக, அறிவுப் பரிமாற்றத்தின் அடித்தளமாக, இந்த பன்னாட்டு புத்தகத் திருவிழா நிறைவடைந்ததில் தமிழ்நாடு முதலமைச்சராக மட்டுமல்லாமல், புத்தகத்தின் ஆர்வலனாகவும் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்! அதுவும் சர்வதேச புக்கர் பரிசை வென்ற கன்னட பெண் எழுத்தாளர் மரியாதைக்குரிய "பானு முஷ்டாக்" அவர்கள், இந்த மேடையில் இருப்பது என்னுடைய மகிழ்ச்சியை மேலும் கூட்டுகிறது! இங்கே வந்தவுடன் என்னைப் பார்த்து, நான் ஆற்றக்கூடிய செயல்பாடுகள் பெருமை அளிப்பதாக சொன்னார். உண்மையிலேயே அவர்களின் எழுத்து தான் நம்மை பெருமைப் படுத்துகிறது.

"ஏற்கனவே, ஒய்.எம்.சி.ஏ. திடலில், ஒரு புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறதே, அப்படியானால், இந்த பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவின் மைய நோக்கம் என்ன?" என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கலாம். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, இந்தப் புத்தகத் திருவிழாவில் மொழி பெயர்ப்புகள், பதிப்புரிமை பரிமாற்றம் ஆகியவற்றில்தான் மிகுந்த முக்கியத்துவம் செலுத்தியிருக்கிறோம்! அது எவ்வளவு அவசியம் என்பதற்கு இங்கே வந்திருக்கக் கூடிய பானு முஷ்டாக் அவர்களின் வெற்றியே ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது! ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டதால் தான் அவருடைய "ஹார்ட் லேம்ப்" நூலும், தென்னிந்தியப் பெண்களின் வாழ்வுரிமை வாழ்க்கையும், உலக அளவில் கவனம் பெற்றிருக்கிறது!

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### தலைசிறந்த படைப்புகளுக்கு "செம்மொழி இலக்கிய விருது"!

**குறிப்பிட்ட இந்திய மொழிகளில் வெளியாகின்ற, தலைசிறந்த இலக்கிய படைப்புகளுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில், ஆண்டுதோறும் தேசிய அளவிலான விருதுகள் வழங்கப்படும். இதனை அறிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முதல்கட்டமாக, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா, வங்காளம் மற்றும் மராட்டிய மொழிகளில் வெளியாகின்ற தலைசிறந்த படைப்புகளுக்கு ஆண்டுதோறும் "செம்மொழி இலக்கிய விருது" என்ற பெயரில் அந்த விருது வழங்கப்படும். விருதுடன், தலா 5 இலட்சம் ரூபாய் பரிசுத்தொகையும் வழங்கப்படும்.**

### தமிழ்நாடு அரசு அறிவித்த

## ஓசூர் விமான நிலையத் திட்டத்திற்கு ஒன்றிய அரசு அனுமதி மறுப்பு!

### ஓசூர் மக்களிடையே பெரும் அதிர்ச்சி!

புதுடெல்லி, ஜன. 20 -

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் நகரம் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது.

தொழில் நகரமான ஓசூரின் வான்வழிப் போக்குவரத்துக்கு அண்டை மாநிலமான கர்நாடகாவின் பெங்களூரையே நம்பியுள்ள நிலையில், தொழில் வளர்ச்சியை கருத்தில் கொண்டு ஓசூரில் சர்வதேச விமான நிலையம் அமைக்கப்படும் என தமிழ்நாடு அரசு கடந்த ஆண்டு அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஓசூரைச் சுற்றியுள்ள 5 இடங்களை தேர்வு செய்து இந்திய விமான நிலைய ஆணையத்துக்கு அனுப்பி வைத்தது.

இந்த திட்டத்தை நிறைவேற்ற 2 இடங்கள் சாத்தியம் என இந்திய விமான நிலைய ஆணையம் பதிலளித்தது.

இதன் பின், ஓசூர் வட்டத்துக்கு உட்பட்ட 12 கிராமங்களில் 2 ஆயிரத்து 980 ஏக்கர் நிலத்தில் விமான நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், ஓசூர் பகுதியில் விமான நிலையம் அமைப்பதற்கான அனுமதியை வழங்க முடியாது என பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஓசூரைச் சுற்றியுள்ள வான் பகுதி ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் அங்கு ராணுவ மற்றும் சோதனை விமானங்கள் பறப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுவதால், பயணிகள் விமானப் போக்குவரத்துக்கு அனுமதி அளிக்க முடியாது என்றும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**மக்களிடையே பெரும் அதிர்ச்சி!**

ஒன்றிய அரசின் இந்த முடிவு ஓசூர் மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## ஈரோட்டில் காலிங்கராயர் முழு உருவ வெண்கல சிலை!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்தார்!

ஈரோடு, ஜன. 20 -

ஈரோடு மாவட்டத்தில் 744 ஆண்டுகளுக்கு முன்பு நதி நீர் இணைப்பிற்கு முன்னோடியாக திகழ்ந்தவர் காலிங்கராயர். காலிங்கராயன் கால்வாய் மூலம் ஈரோடு மாவட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. பவானி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்து வாய்க்கால் வெட்டி பாசனம் செய்து விவசாயிகள் வாழ்வில் ஒளியேற்றிய காலிங்கராயன் மன்னரை கௌரவிக்கும் வகையில், தமிழ்நாடு அரசு சார்பில், ஈரோடு மாவட்டம் வெள்ளோட்டில் காலிங்கராயன் முழு உருவ வெண்கல சிலை அமைக்கப்பட்டுள்ளது.

35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள, காலிங்கராயன் முழு உருவ வெண்கல சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி மூலம் திறந்து வைத்தார்.

இதேபோன்று, போட்டித் தேர்வுக்கான நூலகத்தையும் முதல்வர் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார், ஈ.ஆர்.ஈஸ்வரன், ஏ.ஜி.வெங்கடாசலம், வடக்கு மாவட்டச் செயலாளர் என். நல்லசிவம், கழக மாநில நிர்வாகிகள் கந்தசாமி, எஸ்.எல்.டி. சச்சிதானந்தம், சிந்து ரவிச்சந்திரன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, மாநகர, நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.1.2026) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக ஈரோடு மாவட்டம், வெள்ளோட்டில் மன்னர் காலிங்கராயர் அவர்களின் முழு திருவுருவ வெண்கலச் சிலையை திறந்து வைத்தார்.